**Series : SKS/1**

Code No. **6/1**

Roll No. | | | | | | | |

Candidates must write the code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **4** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the serial number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the student will read the question paper only and will not write any answer on the answer script during this period.

# தமிழ்
# TAMIL

*கொடுக்கப்பட்ட நேரம் : 3 மணி* — *அதிக மதிப்பெண்கள் : 100*

*Time allowed : 3 Hours* — *Maximum Marks : 100*

## பகுதி-அ (50 மதிப்பெண்கள்)

1. (அ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக. **5**

    (i) திருக்குரள் மனிக்கதைகள்.

    (ii) மணையறம் போற்றும் மங்கையர் திளகம்.

    (iii) மாறியம்மன் திருவிலா.

    (iv) முயர்சி திருவிணையாக்கும்.

    (v) ஆள்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றுதல் வேண்டும்

    (vi) பெரிய புறாணக் காளத்துக் கதைகள்.

    (vii) இது ஒரு வரளாற்று சிரப்பு மிகுந்த இடம்.

    (ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய்யிட்டு எழுதுக. **5**

    (i) விரைவாக செல்; வண்டி வரபோகிறது.

    (ii) என் எதிரே எட்டு பேர் வர கண்டேன்.

    (iii) அந்த காளை வைக்கோலை தேடி ஓடியது.

    (iv) கடன் வாங்கி காலத்தை கழிக்காதே.

    (v) மேல தெரு கண்ணன் கடைக்கு சென்றான்.

    (vi) எதையும் எழுதி பழக வேண்டும்; எப்பொழுதும் உரக்க படிக்க வேண்டும்.

    (vii) ஆடம்பர செலவுகளை தவிர்.

(இ) கீழ்வரும் வாக்கியங்களுள் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு செய்க. **5**

(i) கண்ணன் தமிழைக் கற்பித்தான் (தன் வினை வாக்கியமாக மாற்றுக)

(ii) நான் நன்றாக படித்தேன்: தேர்வில் வெற்றி பெற்றேன்.(கலவை வாக்கியமாக மாற்றுக)

(iii) எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள்- (எதிர்வினை வாக்கியமாக மாற்றுக)

(iv) 'தம்பி! செய்வதை திருந்த செய்' - என்றார் என் ஆசிரியர் (அயற்கூற்றாக்குக)

(v) நான் நல்ல புத்தகங்களைப் படித்தேன் - (செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக)

(vi) நாள் தோறும் மழை பெய்யாமல் இல்லை (உடன் பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக)

(vii) அன்பழகன் இயற்கைக் காட்சிகளைக் கண்டான் (பிறவினை வாக்கியமாக மாற்றுக)

2. (i) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **10**

இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்த பரப்பினை உடையது இந்தியா. இற்றைய உலகப் பரப்பளவை அடிப்படையாக வைத்துக் கணக்கிடும் பொழுது இந்தியா ஏழாவது மிகப் பெரிய நாடாக உள்ளது. இங்கு பல்வேறுபட்ட மத, இன, மொழி வேறுபாடுடைய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனால் அடிக்கடி இப்பாகுபாடுகளைப் பயன்படுத்தி அந்நிய சக்திகள் நம் அமைதியைச் சீர்குலைத்து வருகின்றன. சமீப காலமாக உள்நாட்டு மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களைப் பிளவு படுத்தும் முயற்சியில் வெளிநாட்டுச் சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக மத தீவிரவாதத்தை மக்களிடையே புகுத்தி மக்களைப் பிளவு படுத்தத் தொடங்கியுள்ளன. தீவிரவாதங்களும் அயல் நாட்டு அச்சுறுத்தல்களும் நாட்டுப் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கி வரும் இவ்வேளைகளில் சில குறுகிய எண்ணங்களும் மக்களைப் பிளவுபடுத்துவதில் ஈடுபடுகின்றன. கல்வி அறிவு பெற்று வேலையின்றித் தவிக்கும் பட்டதாரி இளைஞர்களில் பெரும்பாலானோர் தங்களின் நிலைக்கு பதவியில் இருப்பவர்களின் அணுகுமுறையே காரணமென்று தங்களை அரசுக்கெதிராகப் போராடும் அமைப்புகளில் இணைத்துக் கொள்கின்றனர். இது போன்ற குறுகிய எண்ணங்களின் தூண்டு கோளுக்கு இன்றைய மாணவர்கள் செவிசாய்த்தல் கூடாது.

**வினாக்கள்:**

(i) இந்தியாவின் சிறப்பு யாது? **(2)**

(ii) அந்நியச் சக்திகள் நம்மிடம் உள்ள எந்த வேறுபாட்டைக் கண்டு நமது அமைதியைச் சீர்குலைக்க முற்படுகின்றன? **(2)**

(iii) சமீபகாலமாக வெளிநாட்டுச் சக்திகள் எத்தகைய தீவிரவாதத்தை நம் மக்களிடையே பரப்பி வருகின்றன? **(2)**

(iv) அரசுக்கெதிராக இன்றைய இளைஞர்கள் போராடக் காரணம் யாது ? **(2)**

(v) இன்றைய மாணவர்கள் எத்தகைய தூண்டுதல்களுக்குச் செவி சாய்த்தல் கூடாது? **(2)**

(ii) கிரிக்கெட் வீரர் சச்சின் டண்டுல்கரை நேர்காணல் செய்க **5**

**(அல்லது)**

கீழ்க்காணும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுது.

சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்;
இன்று புதியதாய்ப் பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர் !
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா.

(1) மீளாதது எது? **(1)**

(2) எக்குழியில் வீழாதே என்கிறார்? **(1)**

(3) எவ்வாறு எண்ண வேண்டும்? **(1)**

(4) எவற்றைத் திரும்பி வாரா எனக் கூறுகிறார்? **(1)**

(5) இப்பாடலுக்குப் பொருத்தமான ஒரு தலைப்புத் தருக. **(1)**

3. கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பில் **மூன்று** பக்க அளவில் கட்டுரை வரைக. **10**

(1) விண்வெளியில் இந்தியச் சாதனைகள்

(2) மழைநீர் சேகரிப்பு

(3) எல்லோரும் இந்நாட்டு மன்னர்

4. பின் வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்று** குறித்து கடிதம் எழுதுக. **10**

தெரு விளக்கு அமைத்துத் தருமாறு நகரமன்ற ஆணையாளருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக

**(அல்லது)**

பள்ளி இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் ஒன்று வரைக. (எக்கடிதமாயினும் உமது முகவரி. த.எழிலன்/எழிலரசி, 48, சேக்கிழார் தெரு, குன்றத்தூர். எனக் கொள்க)

## பகுதி - ஆ (50 மதிப்பெண்கள்)

1. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. **2 × 10 = 20**

(i) பண்டைத்தமிழ் மக்கள் நனிநாகரிகராய் விளங்கியமையும் உயர்க் குணங்களைப் போற்றி வாழ்ந்தமை பற்றியும் எழுதுக.

(ii) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாய் அறநெறிச்சாரம் கூறுவன யாவை?

(iii) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளை எழுதுக.

(iv) நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதினை விளக்குக.

2. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. **2 × 5 = 10**

(i) இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்? ஏன்?

(ii) பொறையுடைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

(iii) சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை எழுதுக.

(iv) 'மறப்பரிது நும் நன்றி' என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளை எழுதுக.

3. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க. **5**

'செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருள் மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் ஒலி படைத்தது ஊர்'

(i) இப்பாடல் அடிகள் எந்நூலில் உள்ளன? ஆசிரியர் யார்? **(2)**

(ii) பூங்கொடியாள் - யார்? ஊர் எது? **(2)**

(iii) செங்கதிரோன் சென்றொளித்த திசை எது? **(1)**

**(அல்லது)**

'நல்லது செய்த லாற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

(i) இவ்வடிகள் எந்நூலில் உள்ளது? ஆசிரியர் யார்? **(2)**

(ii) இவ்வடிகளைக் கொண்ட பாடல் எத்திணையைச் சேர்ந்தது? எத்துறையைச் சார்ந்தது? **(2)**

(iii) யாரைப்பார்த்து இப்பாடல் பாடப்பட்டது? **(1)**

4. 'வேலி' இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி வரைக. **10**

**(அல்லது)**

'மதன்' - இக்கதையைப் பற்றிய உன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

5. பால் வண்ணப் பிள்ளை- பாத்திரப் படைப்பை ஆய்க. **5**

**(அல்லது)**

கோமதியின் பண்பு நலன்களை எழுதுக

---